ATS Nallur

பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆ மார்கழி மீ 25 உ புதன்கிழமை (09 - 01 - 1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்:44

## புலிகள் ஆயுதங்களைக் களையாவிடில்

# போர் நிறுத்தம் வேண்டாம்; இராணுவம் கேட்கின்றதாம்!

## இறுதி சந்தர்ப்பம்

வளைகுடா நெருக்கடி தொடர்பாக அமெரிக்கவெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகரும், ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸும் இன்று ஜெனிவாவில் பேச்சு நடத்த இருக்கிறார்கள்.

வளைகுடாவில் வெடிக்கும் என எதிர்பார்க்கப்படும் பெரும் போர் அபாயத்தை தவிர்ப்பதற்கு கிடைத்துள்ள இறுதி சந்தர்ப்பமாக இந்தச் சந்திப்பு அமைகின்றது என சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. [உ]

## தளபதிகள் வற்புறுத்து
### ஜனாதிபதிக்கு தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 9

**பேச்சுவார்த்தைக்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் களைய முன்வராவிடில் அவர்களுடன் போர் நிறுத்தம் செய்ய வேண்டாம்!**

**இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவம் அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இத்தகைய கோரிக்கை நேன்று இராணுவத்தினர் பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவிடமும் இராணுவப் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவிடமும் தெரிவித்திருப்பதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

அமைச்சர் ரஞ்சன் கடந்த

[4 ஆம் பக்கம் பார்க்க

## 3 ஆம் கட்ட நிவாரணம்:
# அரிசிக்குப் பதிலாக கூடுதல் மா, சீனி

யாழ்ப்பாணம், ஜன. 9

சகலருக்குமான விசேட நிவாரணத்துக்குரிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நிவாரணத்தின் மூன்றாம் கட்டம் நாளை ஆரம்பமாகிறது. அதற்குரிய உணவுப் பொருள்களில் அரிசி வழங்கப்படமாட்டாது. அதற்குப் பதில் மா வழங்கப்படும். சீனியின் அளவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். செயலகம் வெளியிட்டுள்ள புதிய உலர் உணவு விநியோக அட்டவணையின் பிரகாரம் 2 கிலோ முதல் 9 கிலோ வரை மாவும், மூக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



அப்ப......யுத்த நிறுத்தம் குழம்பும் என்டதைச் சொல்லாமல் சொல்லுறார் போலை......!

## 3 போராளிகள் காயம்!

யாழ்ப்பாணம், ஜன. 9

மாவிட்டபுரத்தில் நேற்று முன்தினமும், நேற்றும் படையினர் விடுதலைப் புலிகளின் காவல் அரண்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நேற்றுமுன்தினம் படையினர் சுட்டதில் சகீர், தும்பன் ஆகிய இரு போராளிகள் காயமடைந்தனர்.

நேற்று பாரதிதாசன் என்ற போராளி காயமடைந்தார்.

[4ஆம் பக்கம் பார்க்க]

## படையினரை என்னால் கட்டுப்படுத்த முடியாது
### அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 9

விடுதலைப் புலிகளை எதிர்த்துச் சண்டையிட விரும்பும் பாதுகாப்புப்படையினரை என்னால் தடுத்து நிறுத்த முடியாது.

—இப்படி பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினை குறித்து கடந்த திங்கள் கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் அமைச்சர் பேசினார்.

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தம் ஒரு சரணாகதி நடவடிக்கையே என்றும்—

பல்வேறு நிலைகளிலும் விடுதலைப்புலிகள் தோல்வி அடைந்துவிட்ட காரணத்தால்தான் அவர்கள் திடீர் என இந்தச் சண்டைநிறுத்த அறிவிப்பைச் செய்தார்கள் என்றும்—

அங்கு அவர் மேலும் தெரிவித்தார்.

இரண்டு, மூன்று வாரங்களில் அல்லது இரண்டு மூன்று மாதங்களில் விடுதலைப் புலிகளை முடித்தே தீருவோம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நடந்த மீறல் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 9

யுத்த நிறுத்த அறிவிப்புக்குப் பின்னர் கிழக்கில் தினமும் இராணுவத்தினர் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாக விடுதலைப்புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அங்கு இடம்பெற்றுள்ள சில சம்பவங்கள் வருமாறு:-

★ கடந்த 5 ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் சாம்பல்தீவு, ஆத்திமோட்டை மகா வித்தியாலயத்துக்கு அருகில் வைத்து படையினர் வல்லிபுரம் என்னும் பொதுமகனைச் சுட்டுக்கொன்றனர்.

★ கடந்த 6 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டம், குருக்கள் மடம் பகுதியில் ரெலோவினர் பொதுமகன் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்தினர். காயமடைந்த பொதுமகனின் நிலை கவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கிக்கு பணம் 'குமண'வில் வருகிறது!

யாழ்ப்பாணம், ஜன. 9

இன்று பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமண' கப்பலில் மக்கள் வங்கிக்கு 2 கோடியே 50 லட்சம் ரூபா பணமும் எடுத்துவரப்படுகிறது.

கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் மக்கள் வங்கித் தலைமையகம் இங்கு பணம் அனுப்புவது இதுவே முதற் தடவையாகும்.

யாழ். மாவட்டத்திலுள்ள 23 கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இப்பணத்தில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படும் என்று மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வங்கிக் கிளைகளில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் ஒரு மாதத்திற்குரிய கொடுப்பனவு பணமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் சொன்னார்.

இதேவேளை —

கொழும்புக்கு அவசர சிகிச்சைபெறச் சென்ற 12 பேரும் இந்தக் கப்பலில் வருகின்றனர். [ஒ-6-5]

## விலை வீழ்ந்தது

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ்.குடாநாட்டில் நேற்று தேங்காய் எண்ணெயின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

கடந்த சில தினங்களாக 50 முதல் 60 ரூபா வரை விற்கப்பட்ட ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் நேற்று 30 தொடக்கம் 35 ரூபா வரை விற்பனையாகியது. [உ-6]

## பிரசுரம் போடும் ஹெலி; நோக்கம் நோட்டமா?

யாழ்ப்பாணம், ஜன. 9

கடந்த மூன்று தினங்களாக யாழ். நகரில் ஹெலிக்கொப்டர் துப்பாது பிரசுரங்களை வீசி வருகிறது.

முதல் நாளான 6 ஆம் திகதியன்று லேக்ஹவுஸ் தமிழ், ஆங்கில பத்திரிகைகள் வானத்திலிருந்து போடப்பட்டன.

கடந்த இரண்டு நாட்களும் அந்தப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை வெட்டி ஒட்டி, போட்டோஸ்ரற் செய்யப்பட்ட பிரசுரங்கள் வீசப்பட்டன. ஒரு பக்கத்தில் தமிழ். அடுத்த பக்கத்தில் ஆங்கிலம்.

நேற்று வீசப்பட்ட பத்திரிகைப் போட்டோஸ்ரற் பிரசுரங்களில், அரச பிரசாரத்துக்குரிய எந்தச் ''சரக்கும்'' இல்லை.

அதனால் அவை வீசப்படு

[4ஆம் பக்கம் பார்க்க]

## யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க செஞ்சிலுவை சர்வதேச குழு மறுப்பு

கொழும்பு, ஜன. 9

யுத்த நிறுத்த மீறல்களை கண்காணிக்குமாறு அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை ஏற்க முடியாது என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

ஏஜென்ஸி செய்திகள் இத் தகவலை வெளியிட்டன.

போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க வசதியாக செஞ்சிலுவைச் சங்கத்திற்கு தனி விமானம் ஒன்றை வழங்கத் தாம் முன்வந்ததாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார் என்றும் அச் செய்தியில் கூறப்பட்டது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வர்த்தகமும் நிதியும் [உயர்தர வகுப்புகளுக்குரியது] உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் ஆகியன வற்றுடன் வெளிவந்து விட்டது. தொகுப்பு; தேவராஜன், ஜெயராமன் B. Com [Hons] விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-5583]

ஆறு வாரங்கள் நிரம்பிய பால் மறந்த பூச்சி அகற்றிய ஆண் பொமரேனியன் நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். தொடர்பு: கு. ராஜ்குமார், மாவடி அன்மையில் மூளாய் றோட், வட்டுக்கோட்டை. [15461]

### நாற்றுக் கன்றுகள்

எம்மிடம் சிறந்த இன விதை எலுமிச்சை, ஒட்டுத் தோடை, ஒட்டு எலுமிச்சை மா, பலா நாற்றுக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஐம்பது நாற்றுகளுக்கு மேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/5584)

### JAM போத்தல்கள் தேவை

சுத்தமான JAM போத்தல் ஒன்று ரூபா 3/- வீதம்கொள்வனவு செய்யப்படும். வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பின்வரும் முகவரியில் கொடுக்கலாம். Taste Line Industries (Pvt.) Ltd. No. 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (15390)

### புத்தகங்கள்

1991ல் நடைபெறவுள்ள O/L விசேட பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக 1990 டிசம்பரில் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி விற்பனையாகிறது. தொகையாகவாங்குவோர்க்கு விலைக்கழிவு உண்டு விவரங்கட்கு எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட், இருபாலைச்சந்தி. [15396]

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [15386]

### தவறிவிட்டது

06 - 01 - 91 ஞாயிற்றுக்கிழமை மாலை கேரதீவிலிருந்து பாசையூருக்கு இளைஞர் ஒருவருடைய சைக்கிளில் ஏறி வந்தசிஸ்ரர் தன்னுடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்புநிற 'ரவலிங்பாக்' ஐத் தவற விட்டுவிட்டார். அதைக் கொண்டு சென்ற இளைஞர் G. E. ஈஸ்வரன், புனித அந்தோனியார் கோவிலடி, நாவற்குழி, கைதடி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [15471]

### மலிவு விற்பனை

வீட்டுத்தளபாடப்பொருள்கள், முதிரைக் கதவு, ஆங்கில நூல்கள், பொருளியல், கணக்கியல், முகாமைத்துவம் ஆகியனவிற்பனைக்கு உண்டு. 103, கேரதீவு வீதி, நாவற்குழி. [15456]

### 1990 (O/L) கணிதம்

1990 இல் நடைபெற்ற O/L கணிதப் பரீட்சை வினாத்தாள்களும், விடைகளும், வேறு பயிற்சிகளும் அடங்கிய ஆசிரியர் சச்சிதானந்தனின் மயூரதி வெளியீடுகள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம், துர்க்கா ஸ்ரேசனர்ஸ் சுன்னாகம். (14912)

### துர்க்கா மங்கள சேவை

உங்களது பிள்ளைகளுக்கு சகல துறைகளிலும், மணமக்கள் உள்ளன. எண்கணிதம், வாக்கிய கணிதப்படி ஏற்ற மணமக்களை தெரிவு செய்யவும், விவாகப்பொருத்தம், சாதக பலாபலன்கள் அச்சொட்டாக பலனை அறிந்து கொள்ளவும். தொடர்பு கொள்ள: S. B. தங்கராசா (சோதிடர்) சாந்தி தியேட்டர் முன் யாழ்ப்பாணம். (15465)

### FUDO - TYPEWRITERS

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் FUDO 39/17, மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். [சி-5585]

## துணுக்காய் பகுதி ப. நோ. கூ. சங்கம்

துணுக்காய்

# பதவி வெற்றிடம்

## கணக்காளர் தரம் - 104.8

மேற்படி பதவிக்கு கீழ்க்காணும் தராதரம், தகைமை உள்ள இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித் தகைமை :**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் கணக்கு அல்லது கணக்காய்வுத் துறையில் மேற்பார்வை மட்ட உத்தியோகத்தில் குறைந்தது நான்கு வருட அனுபவமுள்ள கூட்டுறவு பணியாளர் உயர்தர மட்டப் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் அல்லது மேற்கூறப்பட்ட அனுபவத்தோடு க. பொ. த. உயர்தர பரீட்சையில் கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியெய்தியவர்கள்.

அல்லது

கணக்குப் பதிவாளர் (Institute of Book-Keepers U. K.) இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தி அங்கீகரிக்கப்பட்ட ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் கணக்குத் துறையில் அல்லது கணக்காய்வுத் துறையில் குறைந்தது இரண்டு வருட அனுபவமுள்ளவர்கள். அல்லது கணக்குப் பதிவாளர் இடைநிலைப் பரீட்சையில் சித்தியெய்தி அங்கீகரிக்கப்பட்ட ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் குறைந்தது நான்கு வருட அனுபவமுள்ளவர்கள்.

அல்லது

குறைந்தது மூன்று வருட கணக்காய்வு, கணக்குத் துறை, கணக்குப் பதிவு அனுபவமுள்ள கூட்டுறவுப் பணியாளர் ஒன்பதாம் சம்பளத் திட்டத்திலுள்ளவர்கள் அல்லது ஆறு வருட அனுபவமுள்ள கூட்டுறவுப் பணியாளர் பத்தாம் சம்பளத் திட்டத்திலுள்ளவர்கள்.

அல்லது

7 வருட கால அனுபவமுள்ள இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்கள்.

| | |
|---|---|
| வயது : | 25 — 50 வயது வரை (கூட்டுறவு சேவையில் உள்ளவர்களுக்கு வயதுக் கட்டுபாடு இல்லை.) |
| பிணை : | ரொக்கம் — 3,500.00<br>உறுதி — 10,000.00 |
| சம்பளம் : | 1005 — 1705<br>40×5 — 50×10<br>(மற்றும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்டபடிகள்.) |

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர், துணுக்காய் பகுதி ப. நோ. கூ. சங்கம், துணுக்காய் என்ற முகவரிக்கு 25-01-1991 திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிறப்பு, கல்வி, அனுபவத் தராதரப் பத்திரங்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

பொது முகாமையாளர்.

துணுக்காய் பகுதி ப. நோ. கூ. சங்கம்,
துணுக்காய். (சி/5620)

# முக்கிய அறிவித்தல்

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

இதுவரை தென்தமிழீழ மக்களின் துயர் நீக்கும் பணிக்கு தமது பங்களிப்பைச் செய்யத் தவறியோர் 12 - 01 - 1991க்கு முன்னர் பின்வரும் முகவரியில் இயங்கும் எமது புதிய அலுவலகத்தில் செலுத்தவும்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி
நிர்வாகச் செயலகம், தனியார் கல்விப்பிரிவு,
சுண்டிக்குழி.
[சுண்டிக்குழி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)

பொதுச்செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

[15469]

# A. A. T.

**(London & Sri Lanka)**

கணக்கியல் பரீட்சைக்கான வகுப்புக்கள்

**ஆரம்பம்: 12 - 01 - 1991**

**STAGE I, II & III**

G. C. E. சாதாரண தரத்துடன் பயிலக்கூடியது.

விபரங்கட்கு:

**North Ceylon Technical Institute**

St. Peter's Lane, :-: Jaffna.

(சி-5622)

# புதிய உயர் கல்லூரி

## ஆரியகுளம்

## வெளிவாரிப்பட்டப் படிப்பு

G. A. Q. 91/92 விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவு திகதி 26-01-91. விரிவுரைகள் ஆரம்பமாகி உள்ளன.

G. A. Q. 89, 90 ஆண்டுகளில் பதிவு செய்தோருக்கு 91 ஏப்ரலில் பரீட்சை நடைபெற உள்ளது. அதற்கான வினா - விடை வகுப்புக்கள் தற்போது நடைபெறுகின்றன.

திருமதி ச. அருள்நங்கை.

(சி-5621)

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## பொருளியல் - வரதராஜன்

### A/L 90, 91 DAY CLASSES

| | | |
|---|---|---|
| திங்கள் | — 8.00 - 9.30 | செலமதி நிலுவை |
| புதன், வெள்ளி | — 8.00 - 9.30 | இலங்கைப் - பொருளாதாரம் |
| வியாழன் | — 9.00 - 10.00 | பொருளியல் பகுதி I |
| செவ்வாய் | — 9.00 - 10.00 | வினா - விடை வகுப்பு |

### A/L 91 வார இறுதி வகுப்பு

| | | |
|---|---|---|
| ஞாயிறு | — 8.00 | அரசாங்க வரவு செலவுத்திட்டம் |
| திங்கள் | — 2.15 | தேசிய வருமானம் |

### A/L 92 வார இறுதி வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| பிரிவு I | ஞாயிறு | 10 - 11 | அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகள் |
| | திங்கள் | 3 - 4 | |
| பிரிவு II | சனி | 2.30 - 3.30 | உற்பத்தி சாத்திய வளைகோடு |
| | ஞாயிறு | 7.00 - 8.00 | |

ஆரம்பம்

**DAY CLASS 11 - 01 - 91**

வெள்ளி 8.00 a. m.

**வார இறுதி வகுப்பு 13 - 01 - 91**

ஞாயிறு 8.00 a. m.

[சி-5623]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திர, அஸாம் தீவிரவாதிகளுடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பாம்

## இந்தியப் பிரதமர் சந்திரசேகர் கூறுகிறார்

புதுடில்லி, ஜன. 9

அஸாம் தீவிரவாதிகளுடனும் ஆந்திரத்தில் உள்ள நக்ஸலைட்டுகளுடனும் விடுதலைப்புலிகளுக்கு உள்ள தொடர்பு அரசுக்கு தெரியும்.

விடுதலைப் புலிகளின் இத்தகைய தொடர்புகள் ஆழ்ந்த கவலைக்கு உரியவை. ஆதலால் அவர்களது இத்தகைய தொடர்புகளைத் துண்டிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது பற்றிய விவரங்கள் சுமார் 15 நாட்களுக்குள் தெரிய வரும்.

- இவ்வாறு கூறினார் இந்தியப் பிரதமர் சந்திரசேகர்.

ராஜ்ய சபையில் நேற்று இலங்கைத் தமிழர்பிரச்சினை, தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப் போராளிகள் நடமாட்டம் ஆகியன அறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

அப்போது அவர் மேலும் கூறியதாவது: -

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை சரியான விதத்தில் ஒடுக்காததற்காக தி மு க அரசைப் பதவி நீக்கம் செய்யும் உத்தேசம் மத்திய அரசுக்கு இல்லை.

ஓர் அரசு செயல்பட வேண்டிய விதம் இதுவல்ல. என்றாலும் அந்த அரசு தேசியக் கடமைகளை நிறைவேற்றுவதில் தவறாது.

எவரையும் அச்சுறுத்துவதில் அரசுக்கு நம்பிக்கையில்லை.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றி உறுப்பினர் தெரிவித்த மதிப்பீட்டை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

விடுதலைப்புலிகளைக்கைது செய்வது சம்பந்தமாக மாநில அரசு எடுத்துக் கொண்டே நடவடிக்கைகள் திருப்தியாக இல்லை.

இதுவரை தமிழகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைப்புலிகள் தானா என்பது சந்தேகமாக இருக்கிறது

தமிழ் நாட்டில் இலங்கைப் போராளிக்குழுக்களின் நடவடிக்கைகள் பற்றி மத்திய அரசுக்கு திட்டவட்டமான தகவல்கள் இடைத்துள்ளன. மத்திய அரசு இதனை ஒட்டி மாநில அரசுக்கு சில தாக்கீதுகளை அனுப்பியுள்ளது. அவற்றை மாநில அரசு நிறைவேற்றும் என்று நம்புகிறேன்.

மாநில அரசின் செயற்பாடுகளை கவனித்து, நிலைமைக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு புதிய முன் முயற்சிகளை இந்தியா எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் எமது அரசுமிக அவதானமாக இருக்கும்.

சர்வதேச ரீதியில் சமரச முயற்சிகளில் ஈடுபடுவது என்பது மிகவும் கஷ்டமான விடயம்.

முன்னர் இலங்கை விவகாரத்தில் இவ்வாறு இந்தியா ஈடுபட்ட முயற்சி வருந்தத்தக்க முடிவையே தந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் அஸாம் தீவிரவாதிகளுக்கும் ஆந்திர நக்ஸலைட்டுகளுக்கும் மற்றும் சில அமைப்புக்களுக்கும் ஆயுதங்களை வழங்கி வருகிறது. இதனால் நாட்டின் நலன் பாதிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் இன்னும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் உள்ளன.

இது தொடர்பாக தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார். [உ-எ]

# உதயன்

## திருத்துவதற்கு முதற் பாடம்

காலையில் 29 ரூபா விற்ற மண்ணெண்ணை மாலையில 40 ரூபாவாயிற்றே! அந்தப் பொருளின் விலை அத்தனை ரூபாவாகவும், இந்தப் பொருளின் விலை இத்தனை ரூபாவாகவும் மாலையில் உயர்ந்து விட்டதே! வாகனங்கள் தான் தாராளமாக வருகின்றனவே, அப்படியிருக்க காலை ஒன்றும் மாலையில் வேறொன்றுமாக விலை உச்சத்துக்கு உயர்வது ஏன்?

கடந்த திங்கட்கிழமை மாலையில் யாழ். நகரத்து மக்கள், ஏன் குடாநாட்டு மக்கள் எல்லோர் வாயிலும் இவ்வாறான விலை உயர்வுப் பேச்சுகள் தான்!

இந்த விலை உயர்வுகளுக்கு வழிகோலியாக, வவுனியாவுக்கு அப்பால் யாழ்ப்பாணத்து லொறிகள் போய் வருவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக ஒரு 'கதை' பறக்க விடப்பட்டிருந்தது! மதவாச்சியில் முஸ்லிம் குண்டர்கள் சிலர் ஊராணுவத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்து லொறிகளைக் கொளுத்தியதாக பயங்கரப் புரளி வேறு.

யாழ்ப்பாணத்தில் பொருள்களின் விலைகளை உயர்த்திய அத்தனை 'கதை' களும், கட்டுக்கதைகள்; வடித்தெடுத்த வதந்திகள். விலைகளை உயர்த்துவதற்கென்றே, அக்கறையுள்ள தரப்பினர்களால் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட அப்பட்டமான வதந்திகள்.

திங்கள் பரப்பப்பட்டது போன்ற சுரண்டல் நோக்கமுடைய வர்த்தக வதந்திகள் அடிக்கடி தலை எடுப்பவை. பெட்டிக்கடை, சில்லறைக் கடை முதல் மொத்த வியாபாரம் வரை வர்த்தகத்தில் ஈடுபடும் வியாபாரிகளால் வேண்டுமென்றே சிருஷ்டிக்கப்படுபவை. அவை தீயைப் போன்று பற்றிப் பரவி மக்களை எரிப்பவை; சுரண்டுபவை; வாட்டி வதைப்பவை; பலரின் பட்டினிக்கு வழி செய்பவை.

கொழும்பிலிருந்து பாவனைப் பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்ப்பது மிகமிகக் கஷ்டமான காரியம். அத்தனை சிரமங்களையும் அனுபவித்து அவற்றைக்கொண்டு வரும் லொறிச் சொந்தக்காரர்கள் நியாயமான லாபம் வைத்து விற்பதை எவரும் குறைகாண முடியாது. ஆனால் அமர்ந்த இடத்திலேயே இருந்து கொண்டு, தாம் பணம் சேர்ப்பதற்காக, வதந்திகளை உருவாக்கி பொருள்களின் விலைகளை மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் உயர்த்துபவர்கள், அதற்காகப் பதுக்குபவர்கள், பகற் கொள்ளையர்கள் தவித்த முயல் அடிக்கும் தற்குறிகள். தங்களுக்கு உள்ள சமூகக் கடமையை உணராத பெருந்துரோகிகள்.

அவர்கள் இப்படிச் சேர்க்கும் பணம் நிலைக்காது; தானாகவே அழிந்துபோகும். இதனை இன்னமும் உணராத அவர்களைத் தண்டித்துத் தான் வழிக்குக் கொண்டு வர வேண்டும். அவர்களின் வரவு செலவுகளைக் கண்காணித்து, அநியாயமாக உழைத்த பணத்தை மக்களின் சேவைகளுக்குப் பெற்றுக்கொள்ள வேண்டும்! பதுக்கிய பொருள்களை வெளியே கொண்டு வந்து மக்களுக்கு விநியோகிக்கவேண்டும்' அதுவே அவர்களைத் திருத்தக் கூடிய முதற்பாடம்.

# மலையகத்தில்பணிபுரிய இந்திய ஆசிரியர்கள்

## அமைச்சர் தொண்டா தகவல்

கொழும்பு, ஜன 9

மலையகத்தில் உள்ள பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம ஆகிய பாடங்களைப் படிப்பிக்க இந்தியாவில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை வரவழைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தகவலை அமைச்சர் தொண்டமான் ஹட்டனில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் வெளியிட்டார்,

இது தொடர்பாக இலங்கை இந்திய அரசுகளுடன் பேச்சுக்களை நடத்த இருப்பதாகவும் —

இரு அரசுகளின் ஒத்துழைப்பிலேயே இத்திட்டத்தின் வெற்றி தங்கியிருப்பதாகவும் அமைச்சர் சொன்னார்.

மலையக பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்கவே இந்த ஏற்பாடு என்றும் அவர் சொன்னார். [உ-எ]

# ஒருவர் மட்டுமே தொடர்ந்து வேலை செய்ய சம்மதம்

யாழ்ப்பாணம், ஜன 9

சாவகச்சேரி சந்தை தற்போது குத்தகைக்கு விடப்பட்டதை அடுத்து முன்னர் வரிவசூலிப்பில் ஈடுபட்டவர்களில் ஒருவர் தவிர ஏனையோர் புதியவர்கள்.

சாவகச்சேரி நகரசபையால் இந்த சந்தை நிர்வகிக்கப்பட்டு வந்தபோது 15 பேர் வரி வசூலிப்பில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.

சந்தையைப் புதிதாக குத்தகைக்கு எடுத்தவர்கள், ஏற்கனவே வரிவசூலித்தவர்களை அழைத்து தொடர்ந்து நாளாந்தம் 62 ரூபா சம்பளத்தில் கடமை ஆற்றும்படி அவர்களிடம் கேட்டனர் என்றும் —

ஆனால் ஒருவர் தவிர ஏனையோர் அதற்கு மறுத்து விட்டனர் என்றும் — குத்தகைக்கு எடுத்தோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சந்தை குத்தகைக்கு எடுக்கப்பட்டதால் பழைய வரி வசூலிப்பாளர் வேலை இழந்தனர் எனக் கூறப்படுவது சரியல்ல என்றும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன. [இ]

# இடர் உதவி படி

யாழ்ப்பாணம், ஜன.9

கோப்பாய், பலாலி, ஆசிரிய கலாசாலைகளைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், ஊழியர்களுக்கான- கடந்த 6 மாதங்களுக்குரிய இடர் உதவிப் படிக் கொடுப்பனவு [Risk allowance] அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளது.

இத்தகவலை யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [ஒ 5]

# கள் அருந்தியவர் மரணம்

தென்மராட்சி, ஜன.9

குடல் இறக்க வருத்தத்திற்கு அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை பெற்ற ஒருவர் புண் ஆற முன்னர் கள் அருந்தியதால் ஏற்பு ஏற்பட்டு மரணமானார்.

மிருசுவில் தவசிகுளம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வேலு கந்தசாமி [வயது 35] என்னும் இளம் குடும்பஸ்தரே மரணமானவராவார். [ஒ-117]

# தொழிலாளி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

தென்னை மரத்தில் இருந்து தவறி வீழ்ந்த சீவல் தொழிலாளி ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார்.

கொடிகாமம், கச்சாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் விஜயராசா [35 வயது] என்பவரே மரணமானவராவார். (ஒ)

## சர்வோதய இயக்கம்:

# உற்பத்திஇணைப்பாளர் ராஜினாமாச் செய்தார்

கொழும்பு, ஜன.9

சர்வோதய இயக்கத்தில் இருந்து, அதன் வடக்கு - கிழக்கு மாகாண வருவாய் உற்பத்தி இணைப்பாளராகப் பணியாற்றிவந்த திரு. வி. தியாகலிங்கம் இராஜினாமாச் செய்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத் தலைமை அலுவலகத்தைக் கலைத்துவிட்டு, அதற்குப் பதில க பதவி ா, பொலன்னறுவை ஆகியவற்றை உள்ளடக்கிய தலைமை அலுவலகத்தை அனுராதபுரத்தில் நிறுவ நடவடிக்கை எடுத்து வரும் முயற்சிக்கு அதிருப்தி தெரிவித்தும் —

இயக்கத்தில் இருந்து இரு பணிப்பாளர்களைவெளியேற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் திரு. தியாகலிங்கம் ராஜினாமாச் செய்திருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

முன்னர் தலைமையக பிரதம கணக்காளரும் தமது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார் என்பது தெரிந்ததே [அ-எ]

## 4 ஆம் கட்ட நிவாரணமும் நெடுந்தீவில் பூர்த்தி:

# உணவுப் பொருள்கள் மீதம்; களஞ்சியத்தில் பழுதாகும் ஆபத்து

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்க உணவுக் களஞ்சியத்தில் உள்ள மா, சீனி, லக்ஸ்பிறே, பருப்பு ஆகிய பொருள்கள் பழுதடையும் நிலையில் உள்ளன.

இப் பொருள்களை புங்குடுதீவு ப நோ. கூ. சங்கத்துக்கு அனுப்பிவைக்க ஆ[illegible] பட்டபோதும் நெடுந்தீவில் இருந்து அவற்றை எடுத்து வர கடற்படையினரின் அனுமதி தேவைப்படுகின்றது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேல் முருகுப்பிள்ளை நயினாதீவு [illegible] போதும் இன்னமும் அதற்கான உத்தரவு வழங்கப்படவில்லை எனத் தெரிகின்றது.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் சகலருக்கும் நான்கு கட்ட நிவாரணமும் வழங்கி முடிக்கப்பட்டு விட்டது குறிப்பிடத்தக்கது. [இ-111]

# குடும்பஸ்தர் தற்கொலை

தென்மராட்சி, ஜன. 9

கள் அருந்துவதற்கு மகன் பணம் கொடுக்க மறுத்ததால் ஆத்திரமடைந்த தந்தை நச்சு மருந்து அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் மிருசுவில் வடக்கு பெரியானோடையில் இடம் பெற்றது.

பொன்லன் செல்லத்துரை (வயது 56) என்னும் ஆறு பிள்ளைகளின் தந்தையே தற்கொலை செய்து கொண்டவராவார். (ஒ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய கலாசாலை நேர்முகப் பரீட்சை இங்கு

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு புதிய ஆசிரிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் தொடர்ந்து பதினொரு நாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

சென்ற ஆண்டு இறுதிப் பகுதியில் கொழும்பில் நடைபெற்ற மேற்படி பரீட்சையில் சூழ்நிலை காரணமாக வடபகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் தோற்ற முடியாது போயிற்று.

இதனையடுத்து யாழ். கல்விப்பணிப்பாளர் மற்றும் கலாசாலை அதிபர்கள் எடுத்த முயற்சியினால் நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை 260 ஆசிரியர்களுக்கு திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும்–

23 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை 278 ஆசிரியர்களுக்கு கோப்பாய் பயிற்சிக் கலாசாலையிலும் மேற்படி நேர்முகப் பரீட்சைகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் நேற்று தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெற்ற போது அங்கு சென்று தோற்றியவர்களுக்கு இங்கே தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். [ஓ-5]

## போர் நிறு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் வடக்கு கிழக்குக்கு விஜயம் செய்த போது அங்குள்ள பிராந்திய படைத் தளபதிகள் இதனைத் தெரிவித்ததாகவும்–

பின்னர் இந்தக் கருத்தை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா முப்படைத் தளபதிகள் சகிதம் சென்று ஜனாதிபதிக்கு எடுத்துரைத்ததாகவும் அச்செய்தியில் மேலும் விளக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில்–

போர் நிறுத்தத்தைக் கைவிடும்படி படைத் தளபதிகள் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு நெருக்குதல் கொடுத்து வருவதாக ஏஜென்ஸி செய்திகள் நேற்றிரவு தெரிவித்தன.

தற்போதைய போர் நிறுத்தம் நீடிக்கும் என்ற நம்பிக்கை குறைந்து வருவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-6)

## 2வது ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி மாரிமுத்து சண்முகம்

மலர்வு: 4 - 4 - 1904 உதிர்வு: 1 - 1 - 1989

திதி: 9 - 1 - 91

பாசமிகு அன்னையே –நீ
மறைந்து ஆண்டு இரண்டு சென்றாலும்
நெஞ்சமதில் உன் நினைவே
நேச அலை வீசுவதால் –நாளும்
மங்காத உன் எழில் முகமே
மலருதம்மா மனமதிலே

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தொட்டிலடி,
சங்கானை.

[14870]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 - 4 - 1925

அமரத்துவம்: 20 - 12 - 1989

### வயித்திலிங்கம் தம்பையா

[முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி]

ஆண்டு ஒன்றானாலும் நேற்றிருந்தாய் இன்றில்லை என நினையும் எம்மை எல்லாம் காத்துப் போற்றிய அண்ணலே! அம்பலவாணன் பொன்னடி நின்னதாக வாழ்கின்றாய்க்கு, நாம் வாழ வணங்கி, நீள நினைந்து அமைகின்றோம்.

இன்று நின்சிவன் பேற்றுத் திதி என்பதும் எம்மை வாழ்த்த மறக்காய் என்பதும் உணர்கிறோம்.

துணைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

15/37, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(15437)

## படையினரை..

நான் கையேற்றவேலையை பாதியில் நிறுத்தியதே கிடையாது என்றும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார்.

''விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டும் என்றால் புலிகளின் அரசியல் தலைவர்களுடன் அல்லாது இராணுவத் தலைவர்களுடனேயே பேச்சு நடத்தவேண்டும் என பாதுகாப்புப்படையினர் கருதுகின்றனர்,''

—இவ்வாறு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று முன்தினம் கொழும்பில் ராஜதந்திரிகளுடன் நடத்திய சந்திப்பில் உரையாற்றுகையில் தெரிவித்திருக்கிறார். (உ-எ)

### 3 போராளி -

இந்தச் சம்பவங்களின் போது விடுதலைப் புலிகள் எதுவித பதில் தாக்குதலையும் நடத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ]

## கிழக்கில் .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

★ மட்டக்களப்பு மாவட்டம், படுவான்கரை, உன்னிச்சைப் பகுதியில் நேற்று மூன்தினம் ரெலோ வினரும், இராணுவத்தினரும் இளம் பெண் ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர். கண்ணுக்கு முன்னால் நடந்த இந்தச் சம்பவத்தைத் தடுக்க முயன்ற கணவரும் தாக்குதலுக்கு இலக்கானார்.

இறுதியில் அங்கு நின்ற கால்நடைகளையும் அவர்கள் எடுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது [ஓ]

## பிரசுரம்...

வதன் நோக்கம் என்ன என்பதை ஊகிக்க முடியவில்லை.

எரிபொருளை வீணாக்கிப் பயன் இல்லாத கருமத்தில் விமானப் படை இறங்கி இருப்பதாகவும் நம்ப முடியவில்லை.

எது எப்படியோ, ஹெலியின் நோக்கம் தற்போதைய நிலைமையையும், முன்னர் தாழ்ந்து வந்து பார்க்க முடியாத இடங்களையும் நோட்டம் விடுவதாக இருக்குமோ என்று சந்தேகம் எழுப்புகின்றனர் பலர்! [அ]

## அரிசிக்கு....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கால் கிலோ முதல் 3 கிலோ வரை சீனியும் வழங்கப்படும்.

ஒரு கிலோ மா 14 ரூபா 25 சதப்படியும், ஒரு கிலோ சீனி 25 ரூபா 75 சதப்படியும் விலைப்பெறுமானம் கணக்கிடப்பட்டுள்ளது

புதிய அட்டவணைப்படி குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கப்பட இருக்கும் மா, சீனி என்பவற்றின் அளவு விவரம் வருமாறு:-

மா

| | |
|---|---|
| 1 அங்கத்தவர்— | 2 கிலோ |
| 2 அங்கத்தவர்— | 4 கிலோ |
| 3 அங்கத்தவர்— | 5 கிலோ |
| 4 அங்கத்தவர்— | 6 கிலோ |
| 5 அங்கத்தவர்— | 9 கிலோ |

சீனி

| | |
|---|---|
| 1 அங்கத்தவர்— | ¾ கிலோ |
| 2 அங்கத்தவர்— | 2 கிலோ |
| 3 அங்கத்தவர்— | 2 கிலோ |
| 4 அங்கத்தவர்— | 2½ கிலோ |
| 5 அங்கத்தவர்— | 3 கிலோ |

போதியளவு அரிசி கையிருப்பில் இல்லாததாலேயே அதற்குப் பதில் கூடுதல் மாவும், சீனியும் வழங்கப்பட இருப்பதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வழமைபோல் பருப்பு, பால்மா, மண்ணெண்ணை மற்றும் தேயிலை, சவர்க்காரம் ஆகிய பொருள்களும் வழங்கப்படும், [அ-5-100]

# விளைவைச் சமாளிக்க அரசு அவசரத் திட்டம்

கொழும்பு, ஜன 9

வளைகுடாவில் போர் ஏற்படும் இடத்து, அதனால் ஏற்படும் விளைவுகளைச் சமாளிக்கும் அவசரத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் கொழும்பு அரசு ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக, ஜனாதிபதி பிரேமதாஸாவின் பணிப்பின்பேரில் ஏழு அமைச்சர்கள் அவசரத் திட்டத்தைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

எரிபொருள் மற்றும் உணவுக் கட்டுப்பாடு, தேயிலை ஏற்றுமதியில் ஏற்படவுள்ள தடங்கல்கள், அதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படவுள்ள நெருக்கடிகள் ஆகியவற்றைச் சமாளிப்பதாக இந்த அவசரத்திட்டம் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [இ எ]

# அரிசி, மா, சீனி போதியளவு கையிருப்பு

மூன்று மாதங்களுக்குத் தேவையான அரிசி, மா, சீனி கையிருப்பில் இருப்பதாக உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் விரசிங்க மல்லிமராச்சி தெரிவித்தார்.

வளைகுடா போர் அபாயம் தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து நாட்டின் உணவுத் தேவை பற்றி உறுதி செய்யும்படி ஜனாதிபதி பிரேமதாஸா அமைச்சர் மல்லிமராச்சியை பணித்திருந்தார்.

அதற்கு இணங்க அமைச்சர் நேற்று முன் தினம் உயர் மாநாடு ஒன்றை கூட்டியிருந்தார். [இ-எ]

# ராணுவ நடவடிக்கை; தீவகத்தில் 217 பேர் பலி

அனலைதீவு ஜன 9

கடந்த ஆண்டு ஜூன் 15 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தீவுப் பகுதியில் 217 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

ஆய்வு ஒன்றில் இருந்து இது தெரிய வந்துள்ளது. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, காரைநகர், ஊர்காவற்றுறைப்பகுதிகளிலேயே அநேகர் இறந்துள்ளனர். இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற்போனோர் தற்போது இறந்தவர்களாகக் கருதப்பட்டுள்ளபோதிலும் அவர்களின் எண்ணிக்கை இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-18)

## மரண அறிவித்தல்கள்

### சபாபதி பேரம்பலம்

திரு சபாபதி பேரம்பலம் 02-01-91 புதன் அதிகாலை காலமானார். இவர் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி சபாபதியின் அன்புப் புதல்வரும், சரஸ்வதியின் அன்புக்கணவரும், திருமதி ச. விஜயலஷ்மியின் அன்புத் தந்தையும், திரு சி. சரவணபவான் [V. J. S. உரிமையாளர்] அவர்களின் அன்பு மாமனாரும், செல்வி ச. சாந்தி (U. K.), செல்வன் ச. சிவகுமார் [றோயல் கல்லூரி] ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்ற திரு ச. விஸ்வலிங்கம், காலஞ்சென்ற திருமதி த. பார்வதி, காலஞ்சென்ற திரு ச. சாந்தலிங்கம், திருமதி சி. இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. மூ சி. சிற்றம்பலம் (முருகர), புளியங்கூடலைச் சேர்ந்த திரு. க. சி. பாலசுப்பிரமணியம், நாரந்தனையைச் சேர்ந்த திருமதி சி. தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு சி. அமரேசன் (ஆசிரியர், யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி), திருமதி ந. விருத்தாசலாம்பாள் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 02 - 01 - 91 புதன்கிழமை மாலை 5 மணிக்கு இல. 41, விவேகானந்தா வீதி, வெள்ளவத்தையில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

[15466]

### திருமதி கந்தையா சின்னாச்சிப்பிள்ளை

ஆவரங்காலைச் சேர்ந்த திருமதி கந்தையா சின்னாச்சிப்பிள்ளை காலமானார்.

இவர் திருமதி இளையதம்பி அங்கயற்கண்மணி [இளைப்பாறிய ஆசிரியை], காலம்சென்ற திருமதி பஞ்சாட்சரம் அன்னலட்சுமி, திரு ஆ. க. துரைசிங்கம் [கிராமசேவை அலுவலர்], திருமதி சண்முகரத்தினம் இராசேஸ்வரி [கல்வி அதிகாரி – மனைப் பொருளியல்] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 09-01-1991 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

ஆவரங்கால், ஆ. க. துரைசிங்கம்
புத்தூர். [15208] [மகன்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ECALOM** (மனோகரா சந்தி)

**90 A/L புதிய வினாவிடை வகுப்பு**

(துரித மீட்டல் வகுப்பு)

பொருளியல்: உதயன்

சனி - மாலை - 5 மணி (சந்தை சமநிலை)
ஞாயிறு - மாலை - 5 மணி (சென்மதி நிலுவை)

(குறைந்தது 10 வருட வினா விடை)

**DAY CLASS** (திங், செவ், புதன் - 12மணி)

மீண்டும் புதிய பிரிவு - (சென்மதி நிலுவை)

கணக்கியல்: சௌந்தி

கடந்தகால வினா விடை வகுப்பு நடைபெறுகிறது.)

[15454]


## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



பூவுலகில்:
08 - 04 - 1922

வானுலகில்:
11 - 10 - 1990

### திருமதி சிந்தாமணி பார்வதிப்பிள்ளை

[பிரபல ஆயுள்வேத வைத்தியர்]

பாசத்தின் பிறப்பிடமே பண்பின் உறைவிடமே
உங்கள் திருமுகத்தைக் காணாது பரிதவித்து
நிற்கின்றோம்.
காலமெல்லாம் உங்கள் நினைவில் கண்ணீர் சிந்தி
நிற்கின்றோம். பொல்லாத உலகினிலே நில்லாமல்
போனீர்களோ. நீங்கள் இல்லாது எம்மனது
கல்லாகிப் போனதுவே.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

ஸ்ரீ முருகன் அரிசி ஆலை,
மண்டைதீவு. [15371]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
18 — 03 — 1948



மறைவு:
10 — 12 — 1990

### திரு. ஆறுமுகம் குணரத்தினம்

LL. B., Attorney - At - Law

[பதில் உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக் கழகம்]

அன்பான அப்பா!

உங்கள் பிரிவை எங்களால் தாங்கமுடியவில்லை-
மறக்க முடியவில்லை.
உங்களை காண முடியாமல் தவிக்கின்றோம்-
அனாதைகளாய்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அப்பாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட
உறவினர், நண்பர்கள், பல்கலைக்கழக உபவேந்தர்,
ஆசிரியர்கள், ஏனைய உயர் அதிகாரிகள், ஊழியர்கள்
அனைவர்க்கும் எமது அன்பு நன்றிகள்.

மனைவி, பிள்ளைகள்.

கைலாயபிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (15382)

## டாக்டர்கள் கொடுப்பனவு விவரம்

கொழும்பு, ஜன. 9

வடக்கு-கிழக்கு மாகாணம் மற்றும் அதன் எல்லைப்புறங்களில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் டாக்டர்களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை—வழங்க அரசு முடிவு எடுத்திருந்தது.

அது பற்றிய விவரங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

சத்திர சிகிச்சையுடன் மயக்க மருந்து கொடுக்கும் டாக்டருக்கு 10 ஆயிரம் ரூபாவும், சத்திர சிகிச்சை டாக்டருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் — டாக்டர்களுக்கு (House Officer) 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

சுழற்சி முறையில் பணிபுரிய டாக்டர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## புதிய அதிபர்

கொழும்புத்துறை, ஜன. 9

கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் இம் மாதம்முதலாம்திகதிதொடக்கம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளார். [இ-30]


## பாலன் நினைவாக பாடசாலை

சாவகச்சேரி. ஜன, 9

மடீடுவில் சந்திரபுரத்தில் வீரவேங்கை ''பாலன்'' நினைவாக பாலன் பாலர் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

செல்லப்பிள்ளையார் கோவிலடியில் இப்பாலர்பாடசாலையை பாலனின் தாயார் திறந்துவைத்தார். (இ-31)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவகங்கை சிவலிங்கம்

பிறப்பு: 27 - 08 - 1928
இறப்பு: 13 - 01 - 1988
திதி: 09-01-1991

அம்மா!
மூன்றாண்டு சென்றாலும் உங்களன்பு என்றும் மறையாது.
அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்புக் கணவர்,
பிள்ளைகள்.

ஞானவயிரவர் கோவிலடி,
கரும்பராய் தெற்கு. [15464]


**விக்னா டியூசன் சென்ரர்**

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**கலை, வர்த்தக வகுப்புக்கள்**

**DAY CLASSES**

**பொருளியல்:- க. கலாகரன்**
90 Aug.- வினாவிடை வகுப்பு - பகுதி II - 10 மணி
91 Aug.- வங்கியியல் / நேரிய வருமானம்- 9 மணி

**கணக்கியல்:- S.K. பிரபாகரன்**
90 Aug.- கம்பனி முடிவுக் கணக்குகள் - 11 மணி
91 Aug.- செம்மையாக்கங்கள் - 10 மணி

**வர்த்தகம்:- பிரபல ஆசிரியர்**
90 Aug.- வினாவிடை பகுதி II - 12 மணி

அனைத்து பாடங்களும் வழமையான ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றன.

மு. குறிப்பு:- 1. கிழமை நாட்களில் நான்கு பாடமும் நடைபெறும்.
2. விடுதிவசதி செய்துகொடுக்கப்படும். [கி-5616]



**MEDI ANALYZER AG**

**மெடி அனலைசர் AG**

**மருத்துவ ஆய்வுகூட சேவை**

முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த மேற்படி நிறுவனம் 10 - 01 - 91 தொடக்கம் தற்காலிகமாக C. C. C. 274/2, ஆஸ்பத்திரி வீதியில் [பழைய O. P. D. முன்பாக] உள்ள City Clinical Consultation நிறுவனத்தின் கட்டடத்தில் இயங்கும் என்பதை வைத்தியர்களுக்கும் நோயாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

மின் தடை உள்ள போதிலும் நாம் பாவிக்கும் அதி நவீன Micro Processor பற்றரியினாலும் இயங்கக் கூடியதாகையால் சகல இரசாயன (Chemical) பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

வேலை நேரம்: காலை 7 மணி - மாலை 2 மணி

**ஜோர்ஜ் N. Niles**
W. H. O, Fellow Medical Technologist
Director [15459]



**விக்னா டியூசன் சென்ரர்**

52. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**92** பிரிவு 2
Sat., Sun. CLASSES

**ஆரம்பம்: 12 - 01 - 91** (2. 15)

| | |
|---|---|
| பொருளியல் | - திரு. கலாகரன் |
| வர்த்தகவியல் | - பிரபல விரிவுரையாளர் |
| கணக்கியல் | - திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | - திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | - திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் இந்துசமயம் | - திரு காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | - திரு. குணராஜா |
| அரசியல் | - திரு. சீலன் |
| வரலாறு | - திருமதி. குணராஜா |

மு. குறிப்பு:
i கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
ii அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும். [கி/5607]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாளை இரவு அமைச்சரவை கூடும்; அதன் பின் அரசின் முடிவு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 9

அரச தரப்பினர் அறிவித்துள்ள ஒருவாரகால தாக்குதல் நடவடிக்கை நிறுத்தம் நாளை நள்ளிரவு 12 மணிக்கு முடிவடைவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நடைபெற இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாளை நண்பகலுக்கு சற்றுப் பின்னர் அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் ஜனாதிபதி சந்திக்கவிருக்கிறார் என்பது தெரிந்ததே.

புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்புத் தொடர்பாக அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கட்சிகளின் கருத்தை ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது கேட்டறிவார்.

அதன்பின்னர் அன்றிரவு நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் அரசின் முடிவு என்ன என்பது தீர்மானிக்கப்படும். நள்ளிரவில் அரசின் முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## கடற்படை சுட்டதில் இந்திய மீனவர் காயம்!

இராமேஸ்வரம் அருகே கச்சதீவுக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய படகு ஒன்றின்மீது இலங்கை கடற்படை சுட்டதில், படகில் இருந்தவர்களில் ஒருவர் காயமடைந்தார்.

அவர் இராமநாதபுரம் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். [உ-எ]

## இந்தியாவில் தற்சமயம் 2 லட்சம் ஈழ அகதிகள்

இந்தியாவில் தற்போழுது 2 லட்சத்து 10 ஆயிரத்து 808 இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கி இருக்கிறார்கள்.

இலங்கை, வடக்கு—கிழக்கு மாகாணத்தில் சுமுகமான சூழ்நிலை உருவாக்கப்பட்டால்தான் இந்த அகதிகள் திரும்பிச் செல்வதை எதிர்பார்க்க முடியும் என்று உள்துறை இணை அமைச்சர் சுபோத்கான் சஹாய் லோக சபையில் தெரிவித்தார்.

இதேவேளை-

தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவது குறித்து ஸ்ரீலங்கா அரசுடன் இந்தியா தொடர்பு கொண்டுள்ளது என இந்திய உத்தியோகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்த தகவலை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் உறுதி செய்தன என்றும்-

இலங்கைக்கு விஜயம் செய்ய இருக்கும் வெளியுறவு அமைச்சர் வித்யாசரண் சுக்லா அகதிகள் விடயம் குறித்தும் முக்கிய பேச்சுக்களை நடத்துவர் என்றும்- கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [ஒ-எ]

## தேவிலால் கோஷ்டியின் பதவி பறிபோகும்?

புதுடில்லி, ஜன. 9

இந்தியத் துணைப் பிரதமர் தேவிலாலும் மற்றும் அவருடன் சேர்ந்த 36 எம். பிக்களும் பதவி இழக்கக்கூடிய சந்தேகமான ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாக புதுடில்லியில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த 37 பேரும் முன்னர் ஜனதாதள் கட்சியில் இருந்து எம். பிக்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள்.

தற்போதைய பிரதமர் சந்திரசேகர் துணைப் பிரதமர் தேவிலால் ஆகியோர் தலைமையில் ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சி உருவானபோது அக்கட்சியில் அவர்கள் இணைந்தனர்.

கட்சித்தாவல் தடைச் சட்டத்தின்கீழ் இந்த 37 பேரையும் எம். பி. பதவியில் இருந்து வெளியேற்றும்படி ஜனதாதள் [சிங்] பிரிவு சபாநாயகரைக் கேட்டிருந்தது.

அந்தக் கோரிக்கை குறித்து இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் ரபிராய் விசாரணை நடத்தி தீர்ப்பு ஒன்றை வழங்கவிருந்தார்.

ஆனால் அதற்கிடையில் இந்த 37பேர்மீது கட்சித்தாவல் தடைச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பதை இடைநிறுத்தும் உத்தரவை புதுடில்லி மேல்நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது.

நீதிமன்றத் தீர்ப்பு நேற்றுத் தம்மிடம் கையளிக்கப்பட்டதாக சபாநாயகர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிமன்றத் தீர்ப்பை உதாசீனம் செய்யும்படியும் —

நாடாளுமன்றத்தின் இறைமையைப் பணயம் வைக்க முடியாது என்றும் எதிர்க்கட்சி எம். பிக்கள் பலர் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து ஆராய அரசியல் கட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்றைச் சபாநாயகர் இன்று கூட்டியிருக்கிறார். [உ-எ]

## புதுவையில் புதுதேர்தல் ஜெயலலிதா கோரிக்கை

சென்னை, ஜன. 9

புதுவை சட்டசபையைக் கலைத்து விட்டு புதிய தேர்தலை நடத்தும்படி அ.தி.மு.க.பொதுச்செயலாளர்செல்வி ஜெயலலிதா மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்.

பெரும்பான்மைப் பலத்தை இழந்ததைத் தொடர்ந்து புதுச்சேரி தி. மு. க அரசு பதவி விலகியது தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து புதிய அரசு அமைக்கப்படுவது தாமதமாகியுள்ளது.

இதேவேளை தி. மு. க.வைச் சேர்ந்த திரு. டி. இராமச்சந்திரன் தொடர்ந்து காபந்து முதலமைச்சராக பதவி வகித்து வருகிறார். (உ-எ)

## விமானம் கடத்தியவர் சுட்டுக் கொலை!

லிமா, ஜன. 9

பெரு நாட்டில் வடபகுதி நகர் ஒன்றில் இருந்து புறப்பட்ட உள்ளூர் பயணிகள் விமானம் ஒன்றை கடத்திச் சென்ற ஒருவர் லிமா விமான நிலையத்தில் வைத்து பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதன் பின்னர் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 3 பெண் பயணிகளும் அவர்களின் குழந்தைகளும் விடுவிக்கப்பட்டனர்.

20 லட்சம் ரூபா பணம் தந்தால் மட்டுமே பயணக் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று முன்னதாக கடத்தல்காரர் நிபந்தனை விதித்திருந்தார். [உ-எ]

## பலஸ்தீன விடுதலை இயக்கமும் போராடுமாம்

கெய்ரோ, ஜன. 9

வளைகுடாவில் போர் ஏற்படுமானால், பலஸ்தீன விடுதலை இயக்கம் ஈராக் படைகளுடன் தோளோடு தோள் நின்று யுத்தத்தில் ஈடுபடும் என்று அறிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் இத்தகவலை வெளியிட்டார்.

## 9 மாநிலங்களில் பாதுகாப்பு

மாஸ்கோ, ஜன. 9

பதினைந்து மாநிலங்களில் ஒன்பதில் மத்திய அரசின் பாதுகாப்புநடவடிக்கைகளை பலப்படுத்த ஆயுதப்படைகளின் சில பிரிவுகளை அனுப்பி வைக்கும் ஆணையில் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் கையெழுத்திட்டார். [இ-எ]

## காலக்கெடுவில் மாற்றம் இல்லை

லண்டன், ஜன. 9

குவைத்தில் இருந்து ஈராக் படைகள் வெளியேற ஐ. நா. பாதுகாப்புச் சபை விதித்த காலக்கெடு எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது.

இப்படி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கரும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்டும் நேற்று கூட்டாக அறிவித்தனர். [இ-எ]

## ஈராக் வீரர்கள் சவூதியில் தஞ்சம்?

ரியாத், ஜன. 9

ஈராக் விமானப்படையைச் சேர்ந்த வீரர்கள் பலர் ஆறு ஹெலிக்கொப்டர்களில் சவூதி அரேபியாவில் உள்ள விமான நிலையம் ஒன்றில் இறங்கியதாக அமெரிக்கப் படைகள் அறிவித்தன.

வளைகுடா போருக்கான காலக்கெடு நெருங்க, ஈராக் படைகளை விட்டு வீரர்கள் வெளியேறி வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. அதன் ஒரு கட்டமாக ஹெலிக்கொப்டர்களில் ஈராக் விமானப் படையினர் பலர் சவூதியில் தஞ்சம் அடைந்தனர் என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பை ஆதாரமற்றது என்று ஈராக் நிராகரித்து விட்டது. [இ-எ]

## ஹெய்தி புரட்சி பிசுபிசுப்பு

கரிபியன் தீவுகளில் ஒன்றான ஹெய்தியில் இராணுவத்தினர் சிலரின் துணையுடன் இங்கள் அதிகாரவை ஆட்சியைக் கைப்பற்றிய டாக்டர் லா பொன் ரைன் நேற்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

தன்னைத் தானே ஜனாதிபதியாக ... அறிவித்த சில மணித்தியாலங்களில் அவர் கைதானார். [இ-எ]

## இன அடிப்படையில் பதவி உயர்வு கூடாது

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜன. 9

இனவிகிதாசார அடிப்படையில் பதவியுயர்வு வழங்கப்படுவதை நிறுத்துமாறு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

சுங்கத் திணைக்கள அத்தியட்சகரான பொன்னம்பலம் இராமுப்பிள்ளை என்பவரின் விண்ணப்பத்தை ஏற்று அரசுக்கு மேற்படி உத்தரவை நீதிமன்றம் விடுத்தது.

பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க, நீதியரசர்கள் எச். டி. தம்பையா, ஜி. பீ. எஸ். டி. சில்வா, மொஹமட் ஜமீல், மார்க்பெர்னாண்டோ, ரஞ்சித் திரரத்ன, டி. இராமநாதன் ஆகிய ஏழு பேரைக் கொண்ட நீதிமன்றமே இந்தத் தீர்ப்பை வழங்கியது. நீதியரசர்கள் தனித்தனியாகத் தமது தீர்ப்பை வழங்கினர்.

''சட்டத்தின் முன் சமத்துவம்'' என்ற அடிப்படையிலேயே பதவியுயர்வு வழங்கப்படவேண்டும் என அனேகமாக எல்லாத் தீர்ப்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இன அடிப்படையிலான எந்தவொரு பதவியுயர்வும் சமத்துவ உரிமை மீறலாகும்'' என்று பிரதம நீதியரசர் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். (உ)

## 280 பேர் உயிரிழப்பு

கடந்த சில நாட்களாக பாகிஸ்தானில் நிலவி வரும் கடும் குளிர் காரணமாக இதுவரை 280 பேர் இறந்துள்ளனர். இவர்களில் 7 பேர் பனிக்காற்றில் விறைத்து மரணமானதாகக் கூறப்பட்டது.

## ஆசிரியர் லீவு விடயம்; சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 9

ஆசிரியர்கள் தமது அத்தியாவசிய தேவையின் நிமித்தம் லீவு எடுப்பதை எவரும் தடுக்கவும் முடியாது. சம்பளமற்ற லீவு வழங்கவும் முடியாது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தவணையில் லீவு எடுத்தால் அது சம்பளமற்ற லீவாகக் கருதப்படும் என அண்மையில் யாழ். கல்விப் பணிப்பாளர் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்த அறிக்கையை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் விடுத்துள்ளார்.

ஆசிரியர்களில் மிகப் பெரும்பான்மையினர் தமது கடமையை சரிவரச் செய்துவரும் இவ் வேளையில் கல்விப்பணிப்பாளரின் அறிவிப்பு வேதனை அளிப்பதாகவுள்ளது.

எந்த ஓர் ஆசிரியருக்கும் ஸ்தாபனக் கோவையின்படி சம்பளமற்ற லீவு வழங்கமுடியாதெனவும் இதற்கு முன்னாக கல்விப் பணிப்பாளரோ, அதிபர்களோ நடாத்தால் சங்கம் வெறுமனே அதைப் பார்த்துக் கொண்டிருக்காது எனவும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-5]

## கல்வி தான் முக்கியம்: சங்க வளர்ச்சி அல்ல

### பணிப்பாளர் பதில்

மாணவர்கள் இழந்த கல்வியை துரிதமாக ஈடு செய்ய அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய காலம் இது.

—இவ்வாறு யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் லீவு எடுப்பது தொடர்பாக தாம் ஏற்கனவே அறிவித்த நிலைப்பாடு குறித்து ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கை பற்றிக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிலர் சங்கத்தை வளர்க்க விரும்புகிறார்கள். நாமோ கல்வியையும், மாணவர்களையும் பாடசாலைகளையும், சமூகத்தையும் வளர்க்கப் பாடுபடுகிறோம். —என்றார் அவர்.

இன்றைய நிலையை உணர்ந்து செயற்படும் மனப்பாங்குதான் ஆசிரியர்களுக்குத் தேவை.

அறிக்கைகளோ, ஸ்தாபனக் கோவைகளோ, அறைகூவல்களோ, தொழிற் சங்கப் போராட்டங்களோ இன்று தேவையில்லை. - இவ்வாறு அவர் மேலும் கூறினார். [உ-5]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 202/... இல் உள்ள அச்சகத்தில் 9 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org